දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ஈடி/5/68/3/1/11..............

දිනය / திகதி / Date ..........2005.06. 23..........

**சுற்றறிக்கை இல: 2005/14**

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்

**நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான**
**<u>சான்றிதழ் பாடநெறிக்காக கற்கை விடுமுறை வழங்கல்</u>**

இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்களுக்காக கொழும்புப் பல்கலைக்கழக நூலக மற்றும் தகவல் கற்கை நிலையம் (NILIS) மூலம் நடாத்தப்படும் நூலக மற்றும் தகவல் தொடர்பான சான்றிதழ் (வார இறுதி) பாடநெறிக்காக கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு அப்பாடநெறியின் வார இறுதி நாட்களில் நடைபெறும் விரிவுரை மற்றும் அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக அவ்வார இறுதி நாட்களுக்கு முன்னரான வெள்ளிக்கிழமையன்று கீழ்க் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் கற்கை விடுமுறை அங்கீகரிக்க முடியும்.

1. பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் விரிவுரை அல்லது அமர்வு நடைபெறும் வாரங்களுக்காக மாத்திரம் உரியதானவாறு வெளிக்கிழமை கற்கை விடுமுறை பெற வேண்டியதுடன் பாடநெறிக்காக கலந்துகொள்ளாத வார இறுதி நாட்களுக்காக இவ்விடுமுறை செல்லுபடியாகாது.
2. பாடநெறியை பூர்திசெய்வதற்காக விரிவுரைகளில் 80% பங்கேற்பு இருக்க வேண்டியதுடன், அவ்வாறல்லாதவர்கள் பெற்ற சகல கற்கை விடுமுறைகளும் ரத்தாகும்.
3. விண்ணப்பிக்கும் சகல கற்கை விடுமுறைகளுக்காகவும் சமூகமளிப்பு சான்றிதழ் மாதாந்தப் பாடநெறியை நடாத்தும் நிறுவனத்தினால் பாடநெறியை மேற்கொள்பவர்களது நிறுவன பொறுப்பாளர்களிடம் சமர்பிக்கப்பட வேண்டும்.
4. இச்சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கூறப்பட்ட பாடநெறியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்காக வழங்கப்படும் கற்கை விடுமுறை கடமை அலுவலகத்தில் இருந்து 48 கிலோமீற்றர் அல்லது அதனைவிட அதிகரித்த தூரத்தில் இருந்து வருகை தருவோருக்கு மாத்திரம் உரித்தாகும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் கீழ் இப்பாடநெறியை தொடரும் தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்காக கற்கை விடுமுறை அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவாய் அறியத் தருகிறேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதி:

1. மேலதிக செயலாளர்
2. சகல மாகாணக் கல்விப் செயலாளர்கள்
3. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

*tb/mydocuments/g1/nustruth1/study leave*